கொடைக்கானலில் இடம் வாங்க விற்க அணுகவும்.
கொடைக்கானல் மற்றும் மேல் மலைப் பகுதிகளில் எஸ்டேட், பல வகை தோட்டங்கள், வீடு கெஸ்ட் ஹவுஸ் விற்க எங்களை அணுகவும்
தொடர்புக்கு:
98426-99466, 78100 - 68421, 94884 - 20449

PRGI.NO.TNTAM/25/A1635

# நீதிகதிர் எக்ஸ்பிரஸ்

NEETHIKATHIR EXPRESS
மறைக்கப்பட்ட செய்திகள் திறக்கப்படும்
காலை நாளிதழ்

நீதி கதிர் எக்ஸ்பிரஸ் சென்னை அலுவலகம்.
No.19\10 1st Floor
F1 ,7th Street, Nehru Colony,
Nanganallur, Chennai - 600061
Cell: 7810068421,9488420449
neethiPress@ gmail.com

மலர்: 01 · இதழ்: 135 · 20-11-2025 · வியாழன் · பக்கம்- 4 · விலை- ரூ.5 · திருச்சி
Volum 01 · Issue: 135 · 20-11-2025 · Thursday · Pages - 4 · Price- Rs. 5 · Trichy

## இயற்கை வேளாண் மாநாடு: விவசாயிகளுக்கு ரூ.18 ஆயிரம் கோடி நிதியை விடுவித்தார் பிரதமர் மோடி

"கோவை, நவ,.20–

கோவை கொடிசியா வளாகத்தில் தமிழ்நாடு இயற்கை வேளாண்மை கூட்டமைப்பு சார்பில் நடைபெறும் தென்னிந்திய இயற்கை வேளாண் மாநாட்டை பிரதமர் மோடி தொடங்கி வைத்தார். இதற்காக ஆந்திர மாநிலம் புட்டபர்த்தியில் இருந்து விமானம் மூலம் கோவை விமான நிலையத்திற்கு மோடி வந்தடைந்தார். அங்கு அவருக்கு தமிழக கவர்னர் ஆர்.என். ரவி மற்றும் அரசு அதிகாரிகள் வரவேற்பு அளித்தனர். தமிழக அரசு சார்பில் அமைச்சர் சுவாமிநாதன் பிரதமர் மோடியை வரவேற்றார் பின்னர் அவர் அங்கிருந்து கார் மூலம் மாநாடு நடைபெறும் கொடிசியா வளாகத்துக்கு வந்தார். அப்போது வழிநெடுக பாஜக தொண்டர்கள், பொதுமக்கள் பிரதமர் மோடிக்கு உற்சாக வரவேற்பு அளித்தனர். இதனைத்தொடர்ந்து தென்னிந்திய இயற்கை விவசாயிகள் கூட்டமைப்பு சார்பில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. இதையடுத்து பிரதமர் மோடி,இயற்கை வேளாண்மை மாநாட்டை தொடங்கி வைத்து, ஆண்டுக்கு ரூ.6 ஆயிரம் உதவித்தொகை வழங்கும் 'பி.எம். கிசான்' திட்டத்தில் 21வது தவணையாக 9 கோடி விவசாயிகளுக்கு ரூ.18 ஆயிரம் கோடி உதவித்தொகையை வழங்கினார். இந்த திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டை சேர்ந்த 21 லட்சத்து 80 ஆயிரத்து 204 விவசாயிகள் பயன் அடைகின்றனர். இதில் கோவை மாவட்டத்தை சேர்ந்த 44 ஆயிரத்து 837 பேர் பயன்பெறுகிறார்கள்.முன்னதாக தென்னிந்திய இயற்கை வேளாண் மாநாட்டில் பிரதமர் மோடிக்கு மாலை அணிவித்து மரியாதை செய்த விவசாயிகள், 'மாட்டு வண்டி'யை நினைவுப் பரிசாக வழங்கினர். இதனிடையே, இயற்கை விவசாயத்தில் சாதனை படைத்த விவசாயிகளுக்கு பிரதமர் மோடி விருது வழங்கி கவுரவித்தார். அதன்பிறகு இயற்கை விவசாயம் செய்து வரும் விவசாயிகள் மற்றும் விஞ்ஞானிகளுடன் பிரதமர் மோடி கலந்துரையாடினார். முன்னதாக, இயற்கை விவசாயிகள் சார்பில் அமைக்கப்படும் அரங்குகளில் விவசாய உற்பத்தி பொருட்களை பார்வையிட்டார். பிரதமருடன் ஆர்வமாக விவசாயிகள் செல்பி எடுத்து கொண்டனர். இந்த மாநாட்டில் தமிழகம், கேரளா, ஆந்திரா, கர்நாடகா உள்ளிட்ட மாநிலங்களை சேர்ந்த ஏராளமான இயற்கை விவசாயிகள் கலந்து கொண்டுள்ளனர். முன்னதாக மாநாட்டில் பங்கேற்க வந்த பிரதமர் மோடிக்கு 5 அடுக்கு போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது. மேலும் மாநாடு நடைபெறும் கொடிசியா வளாகம் முழுவதும் பிரதமரின் தனி பாதுகாப்பு படையின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. அங்கு 24 மணி நேரமும் போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர். இதுதவிர மாநாடு நடைபெறும் பகுதி உள்ளிட்ட முக்கிய பகுதிகளில் டிரோன்கள் பறக்க தடை விதிக்கப்பட்டுள்ளது. கோவை அவினாசி ரோட்டில் இருந்து கொடிசியா வளாகம் வரை போலீசார் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டனர்.",



சேலம் மாநகராட்சி, செவ்வாய்ப்பேட்டை நகர்புற ஆரம்ப சுகாதார நிலையத்தினை அமைச்சர் இரா. இராஜேந்திரன் மற்றும அமைச்சர் மா. சுப்பிரமணியன் ஆகியோர் திறந்து வைத்தார்கள். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி, சேலம் மாநகராட்சி மேயர் ராமச்சந்திரன், சேலம் மேற்கு சட்டமன்ற உறுப்பினர் இரா. அருள், சேலம் மாநகராட்சி ஆணையாளர் இளங்கோவன், பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத்துறை இயக்குனர் டாக்டர் சோமசுந்தரம் ஆகியோர் உள்ளனர்.



புதுதில்லி, விக்யான் பவனில் ஒன்றிய அரசின் ஜல்சக்தி அமைச்சகத்தின் சார்பில் நடைபெற்ற 6வது தேசிய நீர் விருதுகள் விழாவில் தமிழ்நாடு மாநிலம், திருவள்ளூர் மாவட்டம், பாலாபுரம் ஊராட்சி நீர் மேலாண்மையில் சிறந்த ஊராட்சியாக தேர்ந்தெடுக்கப்பட்டு 3 வது இடத்திற்கான விருதுதினை ஒன்றிய நீர்வளத்துறை அமைச்சர் சி.ஆர்.பாட்டில் திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் அவர்களிடம் வழங்கினார். உடன் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநரும் இணை இயக்குநருமான வை. ஜெயக்குமார் உள்ளார்.

## "கோவை, மதுரை மெட்ரோ ரயில் திட்டத்தை நிராகரித்தது பாஜகவின் பழிவாங்கும் போக்கு" : முதல்வர் ஸ்டாலின் சாடல்

சென்னை: நவ20–

"கோவை, மதுரை மெட்ரோ ரயில் திட்டங்களை மத்திய அரசு நிராகரித்துள்ளது பாஜகவை தமிழ்நாட்டு மக்கள் நிராகரிப்பதற்காக பழிவாங்கும் கீழ்மையான போக்கு" என தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கடுமையாக விமர்சித்துள்ளார்.




தமிழகத்தின் கோவை மற்றும் மதுரை நகருக்கான மெட்ரோ ரயில் திட்ட முன்மொழிவை மத்திய அரசு நிராகரித்துள்ளதாக தகவல் வெளியாகி உள்ள நிலையில், இது தொடர்பாக தனது கருத்தை முதல்வர் ஸ்டாலின் சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

அந்தப் பதிவில் முதல்வர் ஸ்டாலின் கூறியிருப்பதாவது: "'கோயில் நகர்' மதுரைக்கும், 'தென்னிந்திய மான்செஸ்டர்' கோவைக்கும் 'நோ மெட்ரோ' என நிராகரித்துள்ளது மத்தியில் ஆட்சியில் உள்ள பாஜக அரசு. அனைவருக்கும் பொதுவானதாகச் செயல்படுவதுதான் அரசுக்கான இலக்கணம். அதற்கு மாறாக, பாஜகவை தமிழ் நாட்டு மக்கள் நிராகரிப்பதற்காக இப்படி பழிவாங்குவது கீழ்மையான போக்கு.

பாஜக ஆளும் மாநிலங்களில் உள்ள சிறிய இரண்டாம் நிலை மாநகரங்களுக்குக் கூட மெட்ரோ ரயிலுக்கான ஒப்புதல் வழங்கிவிட்டு, எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களைப் புறக்கணிப்பது அழகல்ல. கூட்டாட்சிக் கருத்தியலை இப்படி சிதைப்பதைச் சுயமரியாதைமிக்க மண்ணான தமிழ்நாடு ஒருபோதும் ஏற்றுக்கொள்ளாது.

சென்னை மெட்ரோ பணிகளைத் தாமதப்படுத்தி முடக்க நடந்த முயற்சிகளை முறியடித்து முன்னேறினோம். அதேபோல மதுரை மற்றும் கோவையிலும் வருங்கால வளர்ச்சிக்கு இன்றியமையாத தேவையான மெட்ரோ ரயிலைக் கொண்டு வருவோம்" என்றார்.

மெட்ரோ ரயில் திட்டம் நிராகரிப்பா? கோவை மற்றும் மதுரைக்கான மெட்ரோ ரயில் திட்டம் மக்கள் தொகையை சுட்டிக்காட்டி நிராகரிக்கப்பட்டுள்ளதாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த இரண்டு நகரங்களிலும் மக்கள் தொகை 20 லட்சத்துக்கும் குறைவாக இருப்பதாக மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம் தெரிவித்துள்ளதாக தகவல். கடந்த 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி கோவையில் 15.84 லட்சம் மக்களும், மதுரையில் 15 லட்சம் மக்களும் வசிப்பதாக தரவுகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## உக்ரைன் மீது ஏவுகணைகள், டிரோன்கள் மூலம் ரஷியா சரமாரி தாக்குதல்: 10 பேர் பலி",

"உக்ரைனின் மேற்குப் பகுதியில் உள்ள டெர்னோபில் மீது ரஷியா நேற்றிரவு டிரோன்கள் மற்றும் ஏவுகணைகள் மூலம் சரமாரியாக தாக்குதல் நடத்தியுள்ளது. இதில் 10 பேர் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர். 12 குழந்தைகள் உள்பட 37 பேர் காயம் அடைந்துள்ளனர். டெர்னோபில்லி உள்ள இரண்டு 9 மாடி அடுக்குமாடி குடியிருப்பு மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.38 வகையான பல்வேறு ஏவுகணைகள் மற்றும் டிரோன்கள் மூலம் 476 தாக்குதல் நடத்தியதாக உக்ரைன் விமானப்படை தெரிவித்துள்ளது.சாதாரண வாழ்க்கைக்கு எதிரான ஒவ்வொரு வெட்கக்கேடான தாக்குதலும், போரை நிறுத்த ரஷியா மீதான அழுத்தம் போதுமானதாக இல்லை என்பதைக் குறிக்கிறது என ஜெலன்ஸ்கி தெரிவித்துள்ளார்.உக்ரைன் ரஷியா இடையிலான போரை முடிவுக்கு கொண்டு வரும் வகையில், ஜெலன்ஸ்கி பேச்சுவார்த்தை நடத்த துருக்கி சென்றுள்ளார். துருக்கி அதிபரை சந்தித்து ரஷியாவுக்கு ராஜாங்கரீதியாலான அழுத்தம் கொடுக்க வலியுறுத்துவேன் என ஜெலன்ஸ்தி தெரிவித்துள்ளார். முதலில் அமெரிக்காவின் சிறப்பு தூதர் ஸ்டீவ் விட்காஃப் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ள துருக்கி வருவதாக தெரிவிக்கப்பட்டது. பின்னர், அவர் துருக்கி வரவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.",

## மெட்ரோ ரெயில் திட்டம் ரத்து செய்யப்பட்டதை கண்டித்து, கோவையில் 24ந் தேதி ம.தி.மு.க ஆர்ப்பாட்டம்: வைகோ"

கோவை: நவ.20–

ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ கோவையில் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அவர் கூறியதாவது: கோவை மெட்ரோ ரெயில் திட்டம் என்பது முன்பே அறிவிக்கப்பட்டது. தமிழக அரசும் மெட்ரோ ரெயில் திட்டத்துக்கு அறிக்கை தயாரித்து அனுப்பியது. அவர்கள் கேட்ட கேள்விகளுக்கும் தமிழக அரசு பதில் அளித்தது.இந்த நிலையில் திடீரென நேற்று மாலை கோவை, மதுரை மெட்ரோ ரெயில் திட்டத்தை மத்திய அரசு நிராகரித்து இருக்கிறது.20 லட்சத்திற்கு குறைவாக இருப்பதால் அனுமதி கொடுக்க இயலாது என கூறி ரத்து செய்திருக்கிறது. ஆனால் மக்கள் தொகை குறைவாக உள்ள ஆக்ரா, போபால், கொச்சி உள்ளிட்ட பகுதிகளில் மெட்ரோ ரெயில் திட்டத்திற்கு அனுமதி அளித்து அங்கு பணிகள் தொடங்கி விட்டன.ஆனால் மக்கள் தொகையை காரணம் காட்டி, கோவை மெட்ரோ ரெயில் திட்டத்தை ரத்து செய்தது அதிர்ச்சி அளிக்கிறது. இது தமிழகத்திற்கு எதிரானது. மெட்ரோ ரெயில் திட்டத்தை ரத்து செய்து, மத்திய அரசு தமிழகத்திற்கு துரோகம், வஞ்சம் செய்துள்ளது.கோவை மெட்ரோ ரெயில் திட்டத்தை ரத்து செய்த மத்திய அரசை கண்டித்தும், மெட்ரோ ரெயில் திட்டம் மீண்டும் செயல்படுத்த கோரியும் வருகிற 24ந் தேதி(திங்கட்கிழமை) மாலை 4 மணிக்கு கோவை செஞ்சிலுவை சங்கம் முன்பு ம.தி.மு.க சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தப்படும்.தேர்தல் ஆணையம் கொண்டு வந்துள்ள எஸ்.ஐ.ஆர் பணி மிகப்பெரிய ஜனநாயக மோசடியாகும். தேர்தல் ஆணையம் ஒருசாராகவே செயல்பட்டு வருகிறது. எஸ்.ஐ.ஆர். பணிகளை உடனே நிறுத்த வேண்டும். தமிழகத்தில் உள்ள கோவை, மதுரை மெட்ரோ ரெயில் திட்டத்தை ரத்து செய்துவிட்டு, பிரதமர் மோடி தமிழகத்தில் வந்து திருக்குறளையும், பாரதியார் பாட்டையும் மனப்பாடம் செய்து படித்து தமிழக மக்களை ஏமாற்ற முடியாது. அதனை தமிழக மக்கள் யாரும் நம்பமாட்டார்கள் என்றார்.



சென்னை அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் பள்ளி கல்வித்துறை மற்றும் பொது நூலக இயக்கம் சார்பில் நடைபெற்ற விழாவில் திருவண்ணாமலை மாவட்டம், சி.ம.புதூர் கிளை நூலகர் ஜா.தமீம் அவர்களுக்கு சிறந்த நல்நூலகருக்கான டாக்டர் எஸ்.ஆர். அரங்கநாதன் விருதை கல்வி அமைச்சர் அன்பில் மகேஷ் வழங்கினார். இந்த விழாவில் பொது நூலக இயக்குநர் ஜெயந்தி, பள்ளி கல்வித்துறை முதன்மை செயலாளர் சந்திரமோகன், திருவண்ணாமலை மாவட்ட நூலக அலுவலர் பெ. வள்ளி ஆகியோர் பங்கேற்று வாழ்த்துரை வழங்கினர்.

## புதுச்சேரி மகளிர் காங்கிரஸின் இலவசத் தொழிற்பயிற்சி முகாம் மற்றும் அலுவலகம் திறப்பு விழா!

புதுச்சேரி , நவ.20–

புதுச்சேரி மாநில மகளிர் காங்கிரஸின் ஏற்பாட்டில், பெண்களின் திறன்களையும் வாழ்வாதாரத்தையும் மேம்படுத்தும் நோக்குடன் இலவச தொழிற்பயிற்சி முகாம் (19/11/2025) தொடங்கப்பட்டது. பெண்களின் முன்னோடியும், இந்தியாவின் இரும்பு மங்கையுமான அன்னை இந்திராகாந்தி அம்மையாரின் பிறந்தநாளில் இந்தச் சேவைத் திட்டத்தைத் தொடங்குவது பெருமைக்குரியது என்று மாநில மகளிர் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.



இலவச பயிற்சி வகுப்புகளுக்கான தலைமையகத்தை, புதுச்சேரி மாநில காங்கிரஸ் தலைவர் ஷ்ரீ. வைத்தியலிங்கம் விறி அவர்கள் ரிப்பன் வெட்டித் திறந்து வைத்தார்கள். இந்த நிகழ்ச்சிக்கு புதுச்சேரி மாநில மகளிர் காங்கிரஸ் தலைவி கி.ஸி. நிஷா அவர்கள் தலைமையேற்றார்.

இந்தத் தொடக்க விழாவில் முன்னாள் அமைச்சர்கள் கந்தசாமி, ஷாஜகான், முன்னாள் அரசு கொறடா அனந்தராமன், முன்னாள் துணை சபாநாயகர் விழிஸி பாலன் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர். இவர்களுடன், காங்கிரஸின் மாநில மற்றும் மாவட்ட நிர்வாகிகள், முதலியார்பேட்டை காங்கிரஸ் நிர்வாகிகள் மற்றும் புதுச்சேரி மாநில மகளிர் காங்கிரஸ் உறுப்பினர்கள் திரளாகக் கலந்துகொண்டனர்.

இலவசப் பயிற்சி வகுப்புகள் மகளிர்கள் சொந்தமாகக் கைத்தொழில் செய்து பொருளீட்ட உதவும் வகையில், பின்வரும் பயிற்சிகள் இலவசமாக வழங்கப்பட உள்ளன:

தையல் பயிற்சி வகுப்புகள் ஆர்யா வகுப்புகள் ஸ்போக்கன் இங்கிலீஷ் ஸ்போக்கன் ஹிந்தி திறன் மேம்பாட்டு வகுப்புகள் கணினி வகுப்புகள்,

புதுச்சேரி மாநில மகளிர் காங்கிரஸ் மூலம், அனைத்து மாணவிகளுக்கும் மற்றும் குடும்பப் பெண்களுக்கும் அவர்களின் மாதாந்திர தேவைகளுக்காக எல்லா நாட்களுமே இலவசமாக சானிடரி நாப்கின் பேடுகள் வழங்கப்படுகின்றன.

சானிடரி நாப்கின்களைப் பெற விரும்பும் பெண்கள், மகளிர் காங்கிரஸின் முதலியார்பேட்டை தலைமை தொழிற் பயிற்சி மையத்தில் காலை முதல் மாலை வரை எல்லா நாட்களிலும் பெற்றுக் கொள்ளலாம்.

இடம்: முதல் தளம், கடலூர் மெயின் ரோடு, முதலியார்பேட்டை.

நாள்: 19/11/2025.

வெளியீடு: A.R.நிஷா, மாநில தலைவி, மகளிர் காங்கிரஸ், புதுச்சேரி.

# அரியலூர் மாவட்டத்தில் 186 மாற்றுத்திறன் பயனாளிகளுக்கு ரூ.34.80 இலட்சம் மதிப்பில் பல்வேறு நலத்திட்ட உதவிகளை போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சிவசங்கர் வழங்கினார்.



அரியலூர், நவ.20–

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில், மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் நடைபெற்ற மாற்றுத் திறனாளி களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் 186 மாற்றுத்திறன் பயனாளிகளுக்கு ரூ.34.80 இலட்சம் மதிப்பில் பல்வேறு நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சிவசங்கர் வழங்கினார்.

இவ்விழா மாவட்ட ஆட்சித்தலைவர் இரத்தினசாமி, முன்னிலையில் நடைபெற்றது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவிற்கிணங்க, மாற்றுததிறனாளிகள் நலத்துறையின் சார்பில் மாற்றுத்திறன் நபர்களுக்கு வங்கி கடன் மானியம், கல்வி உதவித்தொகை வழங்கும் திட்டம், காதொலிக் கருவி வழங்கும் திட்டம், இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர் வழங்கும் திட்டம், பார்வையற்றோர் மற்றும் காது கேளாத வாய் பேச இயலாதோர்க்கு திறன்பேசி வழங்கும் திட்டம், பேட்டரியால் இயங்கும் சிறப்பு சக்கர நாற்காலி வழங்கும் திட்டம், மூளை முடக்கு வாதத்தால் பாதிக்கப்பட்டோருக்கான சிறப்பு சக்கர நாற்காலி வழங்கும் திட்டம், மோட்டார் பொருத்திய தையல் இயந்திரம் வழங்கும் திட்டம், எல்போ ஊன்றுகோல் வழங்கும் திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதன் தொடர்ச்சியாக, இன்றையதினம் அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற மாற்றுத்திறனாளிகளுக்கான நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் அவர்கள் 186 மாற்றுத்திறன் பயனாளிகளுக்கு ரூ.34.80 இலட்சம் மதிப்பிலான பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

அதன்படி 10 பயனாளிகளுக்கு திருமண நிதியுதவி திட்டத்தின் கீழ் ரூ.10,21,120 மதிப்பில் தங்க நாணயங்களும், 7 பயனாளிகளுக்கு ரூ.1,36,666 மதிப்பில் வங்கி கடன் மானியங்களும், 10 பயனாளிகளுக்கு ரூ.11,44,000 மதிப்பில் பேட்டரியால் இயங்கும் சக்கர நாற்காலிகளும், 16 பயனாளிகளுக்கு ரூ.1,01,744 மதிப்பில் மின் மோட்டார் பொருத்தப்பட்ட தையல் இயந்திரங்களும், 22 பயனாளிகளுக்கு ரூ.3,18,780 மதிப்பில் வாய் பேசாத மற்றும் காது கேளாத மாற்றுத்திறனாளிகளுக்கு மற்றும் பார்வையற்ற மாற்றுத்திறனாளிகளுக்கு திறன்பேசிகளும், 27 பயனாளிகளுக்கு ரூ.4,25,250 மதிப்பில் சக்கர நாற்காலிகளும், 5 பயனாளிகளுக்கு ரூ.57,225 மதிப்பில் மூன்று சக்கர சைக்கிள்களும், 4 பயனாளிகளுக்கு ரூ.3,876 மதி;ப்பில் ஊன்றுகோலும், 3 பயனாளிகளுக்கு ரூ.1,782 மதிப்பில் எல்போ ஊன்றுகோலும், 3 பயனாளிகளுக்கு ரூ.5,268 மதிப்பில் பிரெய்லி கை கடிகாரங்களும், 77 பயனாளிகளுக்கு ரூ.2,49,660 மதிப்பில் காதொலி கருவிகளும், 2 பயனாளிகளுக்கு ரூ.14,432 மதிப்பில் கார்னர் சீட் என மொத்தம் 186 பயனாளிகளுக்கு ரூ.34,79,803 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சிவசங்கர் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் அரியலூர் நகர்மன்றத் தலைவர் .சாந்தி கலைவாணன், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் .பாலாஜி, மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலக செயல்திறன் உதவியாளர் செல்வகுமார், இதர அரசு அலுவலர்கள், மாற்றுத்திறனாளிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்

# எங்களுக்கு 12 தொகுதிகள் வேண்டும் எடப்பாடி கே.பழனிசாமியிடம் பந்திக்கு முந்திய ஜி.கே.வாசன்.



சேலம், நவ.20–

அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமியை சேலத்தில் உள்ள அவரது இல்லத்தில் ஜி.கே.வாசன் சந்தித்துப் பேசினார்.

அப்போது, அங்கிருந்த கட்சியினரை தவிர்த்து விட்டு இருவர் மட்டும் சுமார் 45 நிமிடங்கள் தனியாக பேச்சுவார்த்தை நடத்தினர்.

இந்த பேச்சுவார்த்தையின்போது, வரும் சட்டப்பேரவைத் தேர்தலில் தமாகாவுக்கு கூடுதல் இடங்களை ஒதுக்க வேண்டி பழனிசாமியிடம் ஜி.கே. வாசன் வலியுறுத்தியதாக தகவல் கசிந்துள்ளது.

இதுகுறித்து சேலம் அதிமுக நிர்வாகிகள் நம்மிடம் பேசுகையில், "கடந்த சட்டப் பேரவைத் தேர்தலில் அதிமுக கூட்டணியில் அங்கம் வகித்த தமாகாவுக்கு 6 சீட் ஒதுக்கப்பட்டது. தொடர்ந்து அதிமுகவுடனும் பாஜகவுடனும் நல்லுறவைப் பேணி வரும் ஜி.கே.வாசன், வரும் சட்டப்பேரவைத் தேர்தலில் கூடுதல் இடங்களை ஒதுக்க வேண்டும் என்ற பிரதான கோரிக்கையுடனே எங்கள் பொதுச் செய லாளரை நேற்று முன்தினம் சந்தித்துப் பேசினார். பொதுச் செயலாளருடனான பேச்சுவார்த்தையின் போது, தமிழகத்தில் 4 மண்டலங்களிலும் பரவலாக தமாகா வேட்பாளர்களை தேர்தலில் நிறுத்த வேண்டும் என்ற முனைப்பை ஜி.கே. வாசன் காட்டியுள்ளார்.

இதன்படி, தஞ்சை, அரியலூர், திருச்சி, சேலம், ஈரோடு, திருநெல்வேலி, காஞ்சிபுரம் உள்ளிட்ட மாவட்டங்களில் தனது தீவிர ஆதரவாளர்களுக்காக வரும் தேர்தலில் 12 சீட்களை ஒதுக்க வேண்டும் என எங்கள் பொதுச் செயலாளரிடம் அவர் வலியுறுத்தியுள்ளார். இதுகுறித்து அதிமுக கூட்டணியில் அங்கம் வகிக்கும் பிற கட்சி தலைவர்களுடன் பேசவேண்டும் என்பதால் ஜி.கே.வாசனின் கோரிக்கையை மறுத்துப் பேசாமல் கேட்டுக் கொண்டிருக்கிறார் எங்கள் பொதுச் செயலாளர். கடந்த முறை 6 தொகுதிகளில் போட்டியிட்ட தமாகா ஒரு தொகுதியில் கூட ஜெயிக்காத நிலையில், இம்முறை 12 தொகுதிகளைக் கேட்கிறது. வாசன் கேட்ட 12 தொகுதிகளை அதிமுக தர யோசித்தால் அடுத்ததாக பாஜக தலைவர்களிடமும் பேசி தனக்கானதை சாதிக்க நினைப்பார் வாசன்"என்றனர்.

இருக்கும் போது ரத்ததானம்.... இறந்த பின் கண்தானம் செய்வீர்...

# மணப்பாறையில் இந்திராகாந்தி பிறந்தநாளை கொண்டாடிய காங்கிரஸ் கட்சியினர்.



திருச்சி மாவட்டம், மணப்பாறையில் திருச்சி சாலையில் உள்ள காந்தி சிலை அருகே காங்கிரஸ் கட்சியின் சார்பில் முன்னாள் பிரதமர் இந்திராகாந்தியின் 108 வது பிறந்தநாள் விழா கொண்டாடப்பட்டது. நகர தலைவர் முருகேசன் தலைவர் தலைமையில் நடைபெற்ற விழாவில் இந்திராகாந்தியின் உருவ படத்திற்கு திருச்சி தெற்கு மாவட்ட தலைவர் கோவிந்தராஜ் மலர் தூவி மரியாதை செலுத்தியதைத் தொடர்ந்து அக்கட்சியினர் வாழ்த்துக்கூறி முழக்கங்கள் எழுப்பினர். இதனைத்தொடர்ந்து பொதுமக்கள் மற்றும் பேருந்து பயணிகள் உள்ளிட்ட அனைவருக்கும் இனிப்புகள் வழங்கினர். இதில் வட்டார தலைவர்கள் சிவ சண்முகம், கே.கே.பி,செல்வம், சத்தியசீலன், ராதாகிருஷ்ணன், தமிழரசன், தினேஷ் பாபு, குழந்தை, டைலர் பாலன், ராதாகிருஷ்ணன், கோபாலகிருஷ்ணன், சிறுபான்மை பிரிவு தலைவர் நஜீம் அப்துல்லா, வீரபாண்டியன், பாண்டி முருகன், கணபதி, ஆரோக்கியம், வக்கீல் கலைராஜ், வக்கீல் ஜான் போஸ்கோ, பெரியசாமி, குமார் உள்ளிட்ட காங்கிரஸ் கட்சியினர் திரளாக கலந்து கொண்டனர்.





திருப்பூர் மாநகராட்சியில் சேகரமாகும் குப்பைகளை கொட்ட இடம் இன்றி அந்தந்த பகுதியில் குப்பைகள் குவித்து வைக்கப்பட்டுள்ளது இதில் சிறு பூலுவப்பட்டி சாலையில் உள்ள காலி இடத்தில் குப்பைகள் குவித்து வைக்கப்பட்டுள்ளது பொதுமக்கள் குடியிருப்பு அதிகம் உள்ள இந்த பகுதியில் குப்பைகள் குவித்து வைக்கப்பட்டு உள்ளதால் கடும் துர்நாற்றம் வீசி வருகிறது. இந்நிலையில் அந்தப் பகுதியில் பணியாற்றும் வட மாநில தொழிலாளர்கள் கடும் துர்நாற்றம் வீசுவதாக கூறி குப்பைகளை அகற்றக் கோரியும் 300க்கும் மேற்பட்டோர் திடீரென சாலை மறியலில் ஈடுபட்டனர். தகவல் அறிந்து விரைந்து வந்த போலீசார் போராட்டத்தில் ஈடுபட்டவர்களை கைது செய்ய முயன்றதால் அங்கு தள்ளுமுள்ளு ஏற்பட்டது.

# மீனவ சமுதாயத்தை சேர்ந்த பட்டதாரி இளைஞர்கள் இந்திய குடிமைப் பணிகளில் சேருவதற்கான போட்டித் தேர்வில் சிறப்பிக்க ஆயத்த பயிற்சி

## திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் தகவல்

திருவள்ளூர் நவ 20 :

அமைச்சர் (மீன்வளம், நிதி, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தம்) 12.11.2017 அன்று சட்ட பேரவையில் அறிவித்த தன் படி மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை மற்றும் சென்னைஅகில இந்திய குடிமைப்பணி தேர்வு பயிற்சி மையம் இணைந்து 202526 ஆம் ஆண்டுக்கு 20 கடல் மற்றும் உள்நாட்டு மீனவ பட்டதாரி இளைஞர்களை தேர்ந்தெடுத்து அவர்களுக்கு குடிமைப் பணிகளுக்கான போட்டித் தேர்வில் கலந்து கொள்ள ஏதுவாக பிரத்யோக பயிற்சி அளித்திடும் திட்டத்தினை செயல்படுத்திட தமிழ்நாடு அரசால் ஆணை வழங்கப்பட்டது. கடல் மற்றும் உள்நாட்டு மீனவ கூட்டுறவு சங்க உறுப்பினர்கள் மற்றும் மீனவர் நலவாரிய உறுப்பினர்களின் வாரிசுதாரர்களான இளைஞர்கள் இப்பயிற்சி திட்டத்தில் சேர்ந்து பயன் பெறலாம்.




இத்திட்டத்தின்கீழ் பயிற்சிபெறவிரும்புவோர் விண்ணப் படிவம் மற்றும் அரசு வழிகாட்டு நெறிமுறைகளை மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறையின் www. fisheries.tn.gov.inஎன்ற இணையதளத்தில் கட்டணம் இன்றி பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் அல்லது விண்ணப்ப படிவங்களை மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை இணை இயக்குநர் (மண்டலம்) சென்னை அலுவலகத்திலோ அல்லது மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை உதவி இயக்குநர் திருவள்ளூர் (இருப்பு) பொன்னேரி அலுவலகத்திலோ அலுவலக வேலை நாட்களில் விலையின்றி பெற்று கொள்ளலாம்.

விண்ணப்பதாரர் மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறையின் இணையதளத்தில் உள்ள அரசு வழிகாட்டு நெறிமுறைகளின் படி விண்ணப்பங்களை பூர்த்தி செய்து கீழ்க்கண்ட முகவரியில் உள்ள திருவள்ளூர் (இருப்பு) பொன்னேரி மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை உதவி இயக்குநர் அலுவலகத்திற்கு பதிவு அஞ்சல் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ 25.11.2025 மாலை 5 மணிக்குள் விண்ணப்பிக்க வேண்டும்.

மேலும் இத்திட்டம் குறித்த கூடுதல் விவரங்களுக்கு மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை இணை இயக்குநர் (மண்டலம்) சென்னை அலுவலகம் அல்லது மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை உதவி இயக்குநர் திருவள்ளூர் (இருப்பு) மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை, உதவி இயக்குநர் அலுவலகம், எண்.05, பாலாஜிதெரு, சங்கர் நகர், வேண்பாக்கம், பொன்னேரி தாலுகா, திருவள்ளூர்601204 என்ற அலுவலக முகவரியில் நேரிலோ 0442797 2457 என்ற அலுவலக தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம் என மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் தெரிவித்துள்ளார்.

# சிறப்பு டெட் தேர்வு எழுத இன்று முதல் ஆசிரியர்கள் விண்ணப்பிக்கலாம்:

## ஆசிரியர் தேர்வு வாரியம் அறிவிப்பு

சென்னை: நவ.20–

சிறப்பு டெட் தேர்வு எழுத இன்று முதல் ஆசிரியர்கள் விண்ணப்பிக்கலாம் என ஆசிரியர் தேர்வு வாரியம் அறிவித்துள்ளது. 1 முதல் 8ம் வகுப்பு வரை மாணவர்களுக்கு கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் டெட் தேர்வில் கட்டாயம் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் என உச்சநீதிமன்றம் சமீபத்தில் உத்தரவிட்டது. டெட் தகுதிப் பெறாமல் பணியில் உள்ள ஆசிரியர்கள் 2 ஆண்டுகளில் தகுதி பெற வேண்டும் எனவும், ஓய்வு பெற 5 ஆண்டு மட்டும் உள்ளவர்களுக்கு தளர்வும் வழங்கப்பட்டது. இதுமட்டுமின்றி தேர்ச்சி பெறாதவர்கள் அல்லது பெற விரும்பாதவர்கள் பணியில் இருந்து கட்டாய ஓய்வு பெற வேண்டும் என தெரிவிக்கப்பட்டது. 2026ம் ஆண்டு 3 முறை பணியில் உள்ள ஆசிரியர்களுக்கு சிறப்பு டெட் தேர்வை நடத்த முடிவெடுக்கப்பட்டது.

அதன்படி, தமிழ்நாட்டில் பணியில் உள்ள ஆசிரியர்களுக்கு உதவும் வகையில், ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் சிறப்பு டெட் தேர்வு நடத்த முடிவெடுக்கப்பட்டது. அதற்கான விண்ணப்பம் நவம்பர் 20ம் தேதி முதல் தொடங்குகிறது. ஆசிரியர்கள் இணையதளம் வாயிலாக டிசம்பர் 20ம் தேதி வரை விண்ணப்பிக்க கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. 01.செப்டம்பர் 2025 தேதிக்கு முன்னர் நியமிக்கப்பட்ட ஆசிரியர்கள் இத்தேர்வை எழுதலாம். முழு நேர, பகுதி நேரம் மற்றும் ஒப்பந்த அடிப்படையில் உள்ளவர்களும் இத்தேர்வை எழுத அறிவுறுத்தப்படுகிறார்கள். இந்நிலையில், ஜனவரி மாதம் தேர்விற்கு விண்ணப்பிக்க அறிவிப்பு வெளியாகியுள்ளது.

# பெண்கள் மீது தொடர்ந்து நடத்தப்படும் தாக்குதலை கண்டித்து இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி ஆர்பாட்டம்



மணப்பாறை நவ 20

தலித்துகள், பழங்குடியினர்கள், சிறுபான்மையினர்கள் மற்றும் பெண்கள் மீது தொடர்ந்து நடத்தப் படும் தாக்குதலை கண்டித்து நவம்பர் 18ஐ சமூகநீதி சமத்துவ நாளாக அனுசரித்து

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி திருச்சி புறநகர் மாவட்டம் சார்பில் நெ.1.டோல்கேட் பேருந்து நிலையம் முன்பு ஆர்பாட்டம் நடைபெற்றது

இவ் ஆர்ப்பாட்டத்திற்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட துணை செயலாளர் அண்ணா துரை தலைமை வகித்தார் மண்ணச்சநல்லூர் ஒன்றிய செயலாளர் கருணாநிதி இலால்குடி ஒன்றிய செயலாளர் சப்தரிஷி இலால்குடி நகர செயலாளர் குணா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாநில துணை செயலாளர் இந்திரஜித் சி.பி.ஐ புறநகர் மாவட்ட செயலாளர் ராஜ்குமார் முன்னாள் மாநில குழு உறுப்பினர் செல்வராஜ் தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்ட செயலாளர் பழனிச்சாமி ஆகியோர் உரை நிகழ்தினார் மாவட்ட பொருளாளர் ஜனசக்தி உசேன் நன்றி கூறினார்

# திருவள்ளூரில் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை சார்பில் சிறுபான்மையினர் சிறப்பு குழு ஆய்வு கூட்டம்

திருவள்ளூர் நவ 20 : திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் பிற்படுத் தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை சார்பில் சிறுபான்மையினர் சிறப்பு குழு ஆய்வு கூட்டம் நடைபெற்றது. தமிழ்நாடு வக்ஃபு வாரிய உறுப்பினர் அ. சுபேர்கான் தலைமை தாங்கினார்.



இக்கூட்டத்தில் 19 பயனாளிகளுக்கு ரூ.2.10 இலட்சம் மதிப்பீட்டில் முஸ்லிம் மகளிர் மற்றும் கிருத்துவ மகளிர் சங்க உறுப்பினர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது. சிறுபான்மையினர் நலத்துறை வாயிலாக செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து சிறப்பு ஆய்வு கூட்டம் சிறுபான்மையின குழு உறுப்பினர் அ.சுபேர் கான் அவர்களால் நடத்தப்பட்டது. இக் கூட்டத்தில் மாவட்டத் தில் சிறுபான்மையினர் களுக்கு செயல்படுத் தப்படும் அரசின் திட்டங்கள் முழுமையாக சென்றடைவது தொடர் பாகவும் அவர்களின் கோரிக்கைகள் தொடர் பாகவும் முழுமையாக ஆய்வு செய்யப்பட்டு உரிய தீர்வு காணப் படுவது தொடர்பாகவும் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுடன் முழுமையான ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

மேலும் தமிழ்நாடு முதலமைச்சர் அனைத்து தரப்பு மக்களுக்கும் சாதி, மத வேறுபாடுகள் இன்றி பல்வேறு நலத்திட்டங் களை வகுத்து செயல் படுத்தி வருகிறார். குறிப்பாக சிறுபான்மையினர் மக்களின் வாழ்வாதாரம் காப்பாற்றுவதற்கு சீரிய திட்டங்களை வகுத்து நடைமுறைப்படுத்த ஆணையிடப்பட்டு, அனைத்து மாவட்டங் களிலும் உரிய முறையில் திட்டங்களின் செயல்பாடுகள் குறித்து முழுமையாக ஆய்வு செய்யவதற்கு அறிவுறுத்தப்பட்டது. இதன் தொடர்ச்சியாக பல்வேறு மாவட்டங் களில் சிறுபான்மையினர் ஆய்வுக்கூட்டங்கள் நடத்தப்பட்டு நலதிட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது என தமிழ்நாடு வக்ஃபு வாரிய உறுப்பினர் தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து முஸ்லிம் மகளிர் உதவும் சங்கம் மூலம் 9 பயனாளிகளுக்கு ரூ.1,80,000 லட்சம் மதிப் பிலான காசோலைகளும் கிறிஸ்தவ மகளிர் உதவும் சங்கம் மூலம் 2 பயனாளிகளுக்கு ரூ.30.000 மதிப்பிலான காசோலைகளும் மற்றும் கிறிஸ்தவ உபதேசியர்கள் மற்றும் பணியாளர் நல வாரிய அட்டை 5 நபர் களுக்கு வழங்கப்பட்டது.இதில் மாவட்ட வருவாய் அலுவலர் சு.சுரேஷ், மாவட்ட பிற்படுத்தப் பட்டோர் நல அலுவலர் உஷா ராணி, உறுப்பினர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# திருச்சி நீதிமன்றத்தில் இலவச கண் பரிசோதனை முகாம்



திருச்சி நவ.20

தேசிய சட்டப்பணிகள் தினத்தை முன்னிட்டு மாவட்ட சட்டப் பணிகள் ஆணைக் குழு சார்பில் திருச்சி மாவட்ட நீதிமன்ற வளாகத்தில் கண் பரிசோதனை மருத்துவ முகாம் இன்று காலை நடைபெற்றது.சட்டப் பணிகள் ஆணை குழு செயலாளர் மாண்புமிகு நீதிபதி பிரபு தலைமை தாங்கினார் .முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி மாண்புமிகு சாமிநாதன் முகாமை தொடங்கி வைத்தார். நீதிபதிகள் கார்த்திகா, வெங்கடேசன், புவியரசு , சௌமியா மேத்யூ, கலை வாணி, அண்ணாமலை,அரசு வழக்கறிஞர் சவரிமுத்து, ,வழக்கறிஞர் சரபோஜி ,அரசு மருத்துவமனை கண் மருத்துவர்கள் பாரதி தேவி, ஜெயப்பிரியா குற்றவியல் வழக்கறிஞர்கள் சங்கச் செயலாளர் பி.வி.வெங்கட் மற்றும் வழக்கறிஞர்கள், நீதிமன்ற ஊழியர்கள் கலந்து கொண்டனர்.முகாமில் நூற்றுக் கணக்கானோர் கலந்துகொண்டு பயனடைந்தனர். நன்றி உரை நீதிபதி கார்த்திகா அவர்கள் கூறினார்.இதற்கான ஏற்பாடுகளை திருச்சி மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு செய்திருந்தன.

# எஸ்.ஐ.ஆர். படிவங்கள் குறித்த சந்தேகங்களுக்கு உதவி எண்கள் அறிவிப்பு

"சென்னை, நவ. 20

தமிழகம் முழுவதும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் (எஸ்.ஐ.ஆர்.) நடைபெற்று வருகிறது. இந்த பணிக்காக தமிழக தேர்தல் ஆணையம் தமிழகம் முழுவதும் சுமார் 77 ஆயிரம் அரசுப் பணியாளர்களை பி.எல்.ஓ.க்களாக (வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள்) நியமித்துள்ளது. வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் கணக்கெடுப்பு படிவத்தை வீடு, வீடாக சென்று வாக்காளர்களுக்கு வழங்கி வருகின்றனர். வாக்காளர்களுக்கு வழங்கப்படும் கணக்கீட்டுப் படிவத்தை பூர்த்தி செய்வதில் பல்வேறு சிரமங்கள் உள்ளதாக வாக்காளர்கள் குற்றம்சாட்டினார்கள். எனவே, கணக்கீட்டுப் படிவங்களில் வாக்காளர்களுக்கு ஏற்படும் சந்தேகங்களுக்கு தீர்வு காணவும், வாக்காளர்கள் மற்றும் அவர்களது உறவினர்களின் பெயர்கள் 2005ம் ஆண்டு வாக்காளர் பட்டியலில் இடம்பெற்றுள்ளதா? என்ற விவரத்தை கண்டறியவும் வாக்காளர் உதவி மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்த நிலையில், வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த படிவங்கள் குறித்த சந்தேகங்களுக்கு 1950 என்ற உதவி எண்ணை தொடர்பு கொள்ள மாநில தேர்தல் ஆணையம் அறிவுறுத்தி உள்ளது. மேலும் 9444123456 என்ற எண்ணில் வாட்ஸ் ஆப் மூலம் தொடர்பு கொண்டு சந்தேகங்களை கேட்டறிந்து கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.",

## நாய் குறுக்கே வந்ததால் டூவீலரில் இருந்து விழுந்த தம்பதி பஸ் மோதி பலி

மதுரை ஜெய்ஹிந்த்புரம், பகுதியைச் சேர்ந்தவர் வெங்கடசுப்பு (56). டீக்கடை நடத்தி வருகிறார். நேற்று காலை டீக்கடையை திறக்க மனைவி பத்மாவதியுடன் (54), டூவீலரில் கிளம்பினார். சிக்கந்தர்சாவடி பகுதியில் வந்தபோது திடீரென சாலையின் குறுக்கே நாய் ஓடி வந்தது. இதனால் நிலைதடுமாறிய டூவீலர், நாய் மீது மோதியதில் கீழே சாய்ந்தது. இதில், கணவன், மனைவி இருவரும் ரோட்டின் கீழே விழுந்தனர். கண் இமைக்கும் நேரத்தில் பின்னால் மதுரை பெரியார் நிலையத்தில் இருந்து அதலை நோக்கி சென்ற அரசு பேருந்து இருவர் மீதும் மோதியது. இதில், அவர்கள் உடல் நசுங்கி பலி யாகினர். தம்பதி உயிரிழக்க காரணமான நாயும் இறந்தது.

# சேலத்தில் குண்டும் குழியுமான தேசிய நெடுஞ்சாலை மக்களின் அவசர கோரிக்கை

சேலம், நவ. 20–

சேலம் மாவட்டத்தில் இருந்து பெங்களூருக்குச் செல்லும் நெடுஞ்சாலையில் அண்மையில் ஆர்.சி.செட்டிப்பட்டி மற்றும் காமலாபுரம் சாலை பகுதிகளில் என இரண்டு மேம்பாலங்கள் கட்டப்பட்டு மக்கள் பயன்பாட் டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளன.



"அதற்கென்ன நல்ல விஷயம் தானே?" என கேட்கத் தோன்றுகிறதா? ஆம், எனக்கும் கேட்கிறது.

பெரும்பாலான இடங்களில் கட்டப்படும் மேம்பாலங்களின் காரணமாக, அவற்றின் கீழ் உள்ள சாலைகள் பராமரிப்பு இல்லாமல், சாதாரண மக்களின் உயிருக்கும் வாகன உடமைகளுக்கும் அச்சுறுத்தல் ஏற்படுத்துவது தொடர்கதையாக உள்ளது.

அதுபோலதான் இங்கும் பராமரிப்பு இல்லாத சாலையின் காரணமாக பல விபத்துகள் நடைபெற்று வருகின்றன. அருகிலுள்ள குடியிருப்பு வாசிகளுக்கும் இந்த விபத்து களின் தாக்கம் அதிகரித்துள்ளது. இது பெங்களூர் தேசிய நெடுஞ் சாலை.

முதல்வரும் அதில் தான் பயணிக்கிறாரா?

தமிழக சட்டப்பேரவை தேர்தல் நெருங்கி வரும் நிலையில், அடிக்கடி முதல்வர், துணை முதல்வர் ஆகியோர் சேலம் வருகை புரிவது அரசியல் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது.

சேலம் மாவட்டம் காமலா புரம் விமான நிலையத்துக்கு வந்த பிறகு சாலை வழியாக பிற பகுதிகளுக்கு செல்வது வழக்கமாக உள்ளது.

காமலாபுரம் விமான நிலையத்திலிருந்து சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம், புதிய மற்றும் பழைய பேருந்து நிலையம் என எங்கு செல்ல வேண்டுமானாலும் இந்த பராமரிப்பு இல்லாத சாலையைத் கடந்தே செல்ல வேண்டும்.

ஆனால் அங்குதான் ஒரு ட்விஸ்ட் இருக்கிறது. ஆரம்பத்தில் சொன்னது போல, காமலாபுரம் மற்றும் ஆர்.சி.செட்டிப்பட்டி மேம்பாலங்களின் கீழுள்ள தேசிய நெடுஞ்சாலை சாலையே பராமரிப்பு இல்லாத அச்சுறுத்தல் சாலையாக உள்ளது.

தலைவர்களுக்கு எல்லாம் மேம்பாலத்தின் மேல் நல்ல சாலை; ஆனால் மக்களுக்கோ கீழே பராமரிப்பு இல்லாத, குண்டும் குழியுமான சாலை.

"இது தான் தேசிய நெடுஞ் சாலைத் துறையின் பராமரிப்பு வரிசையா?" என்று சரமாரியாக கேள்வி கேட்கிறார்கள் பொதுமக்கள்.

அப்பகுதி மக்கள், வாகன ஓட்டிகளிடம் இது குறித்து கேட்கும் போது,

"காலைமாலை அச்சத்துடன் இந்த சாலையைத் தான் கடக்க வேண்டி வருகிறது. குண்டும் குழியுமான சாலையால் முதுகு வலி, உடல் வலி ஏற்படுகிறது. சில நேரங்களில் திடீரென குழிக்குள் வாகனச் சக்கரம் போகும் போது நிலை தடுமாறி விபத்துக்கு ஆளாகும் அபாயமும் உள்ளது. இதனால் இடுப்பு எலும்பு பிரச்சினைகள், நரம்பு இழுத்துப் பிடிப்பு போன்றவை அதிகரித்து மருத்துவச் செலவும் கூடுகிறது," என்று அவர்கள் கூறுகின்றனர்.

பல இரத்தக் காயங்கள் மற்றும் உயிர்பலி ஏற்படக் காத்திருக்கும் நிலையைத் தடுக்க, உடனடி சாலைப் பராமரிப்பு பணிகளை மேற்கொண்டு சரிசெய்ய வேண்டும் என மக்களின் அழுத்தமான குரல்கள் அரசிடம் கோரிக்கை விடுத்து வருகின்றன.

மருத்துவ நலனைக் கருதியாவது மாற்றம் நிகழுமா?

அருகிலுள்ள சில கிராம மக்கள் ஆம்புலன்ஸ் சேவைகள் பெறும் மிக முக்கியமான சாலையாக இது உள்ள நிலையில், சாதாரண மக்களுக்கு ஏதுவான மருத்துவ சேவையை கருத்தில்கொண்டு தேசிய நெடுஞ் சாலை புனரமைக்கப்படுமா என்ற கேள்வி எழுந்துள்ளது.

இது குறித்து அப்பகுதி மக்களிடம் கேட்ட போது, "தேர்தல் வாக்கு சேகரிப்புக்காக வரும் போது இந்த பிரச்னையை முக்கியமாக முன்வைத்து, எங்கள் வாக்குகள் பெற முயற்சிக்கின்றனர்" என்றனர்.

இது தொடர்பாக சேலம் துணை பொது மேலாளர், நெடுஞ்சாலை துறை திட்ட இயக்குநரிடம் பேசிய போது, சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களின் மூலம் உடனடி பராமரிப்பு பணிகளைச் செய்ய ஆவணம் செய்வதாகவும், தற்போது அதிக பாதிப்புள்ள சாலைகளுக்கு முன்னுரிமை அளித்து சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்றும் குறிப்பிட்டார்.

# அரியலூர் மாவட்டத்திற்கு வந்தடைந்த 14வது ஆடவர் ஹாக்கி இளையோர் உலகக்கோப்பை போட்டிக்கான வெற்றிக்கோப்பையினை மாவட்ட ஆட்சித்தலைவர் இரத்தினசாமி, வரவேற்று, காட்சிப்படுத்தினார்.



அரியலூர், நவ. 20–

அரியலூர் மாவட்ட விளையாட்டு அரங்கில், 14வது ஆடவர் ஹாக்கி இளையோர் உலகக் கோப்பை விளையாட்டு போட்டிக்கான வெற்றிக் கோப்பை சுற்றுப்பயணம் அரியலூர் மாவட்டத் திற்கு வந்தடைந்ததை யொட்டி மாவட்ட ஆட்சித்தலைவர் இரத்தினசாமி, வரவேற்று, வீரர், வீராங்கனைகள் மற்றும் பொதுமக்களுக்கு காட்சிப்படுத்தினார்.

இந்நிகழ்வில் ஜெயங் கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் .கண்ணன் கலந்துகொண்டார்.

தமிழ்நாடு விளை யாட்டு மேம்பாட்டு ஆணையம் மற்றும் ஹாக்கி இந்தியா இணைந்து நடத்தும் 14 ஆவது ஆடவர் ஹாக்கி இளையோர் உலகக் கோப்பை போட்டிகள் தமிழ்நாட்டில் 28.11.2025 முதல் 10.12.2025 வரை சென்னை மற்றும் மதுரை மாவட்டங்களில் நடைபெற உள்ளது. இப்போட்டிகள் குறித்து தமிழ்நாட்டில் உள்ள மாணவ/மாணவியர்கள், விளையாட்டு வீரர்/ வீராங்கனைகள், இளைஞர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வண்ணம் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கடந்த 10.11.2025 அன்று சென்னை மேயர் இராதாகிருஷ்ணன் ஹாக்கி விளையாட்டு அரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில் 14 ஆவது ஆடவர் ஹாக்கி இளை யோர் உலகக் கோப்பை சின்னமான காங் கேயனை அறிமுகப் படுத்தி, வெற்றிக்கோப்பை யின் தமிழ்நாடு முழு வதற்குமான சுற்றுப் பயணத்தை கொடி யசைத்து தொடங்கி வைத்தார். அதனைத் தொடர்ந்து இன்றைய தினம் அரியலூர் மாவட்டம், அரியலூர் விளையாட்டு அரங்கத்திற்கு வந்தடைந்த 14ஆவது ஆடவர் ஹாக்கி இளை யோர் உலகக் கோப்பை வெற்றிக் கோப்பையினை மாவட்ட ஆட்சித் தலைவர் . இரத்தினசாமி, வரவேற்று, வீரர், வீராங்கனைகள் மற்றும் பொதுமக்கள் அறிந்து கொள்ளும் வகை யில் காட்சிப்படுத்தினார்.

முன்னதாக 14ஆவது ஆடவர் ஹாக்கி இளையோர் உலகக் கோப்பை போட்டிக்கான வெற்றிக்கோப்பை அரியலூர் நகராட்சி பேருந்து நிலையம், அண்ணாசிலை, செந்துறை சாலை வழியாக பொதுமக்கள் பார்வையிடும் வகையில் மாவட்ட விளையாட்டு அரங்கிற்கு எடுத்துவரப் பட்டது.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் முனைவர்.சிவராமன், அரியலூர் நகர்மன்ற தலைவர் சாந்தி கலைவாணன், மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் லெனின், அரியலூர் ஹாக்கி சங்க நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள், இதர அரசு அலுவலர்கள், வீரர் வீராங்கனைகள், பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# முன்னாள் இந்தியா பிரதமர் இந்திரா காந்தி அம்மயாரின் பிறந்தநாள் விழா. தஞ்சையில் கோலாகலமாக கொண்டாடப்பட்டது.



தஞ்சாவூர்..நவ.20

இந்திய தேசிய காங்கிரஸ்.தஞ்சை மாநகர மாவட்ட காங்கிரஸ் சார்பாக அன்னை இந்திரா காந்தி பிறந்தநாள் விழா தஞ்சாவூர் பழைய பேருந்து நிலைய வளாகத்தில் நடைபெற்றது

தஞ்சை மாநகர மாவட்ட காங்ரஸ் கட்சி யின் தலைவர் பி. ஜி. ராஜேந்திரன் தலைமை யில். காங்கிரஸ் கட்சியின் தொண்டர்கள் அன்னை இந்திரா காந்தி திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி அனைவருக்கும் இனிப்புகள் வழங்கினர். பாராளுமன்ற உறுப்பினர் சேர்க்கை பொறுப்பாளர் ராஜா மோகன் முன்னிலை வகித்தார். மாவட்டத் துணைத் தலைவர் லட்சுமி நாராயணன். மாநில பொதுக்குழு உறுப்பினர் வயலூர் ராமநாதன். தஞ்சை மாநகர உறுப்பினர் சேர்க்கை பொறுப்பாளர் செந்தில் சிவகுமார். மாநகர உறுப்பினர் சேர்க்கை பொறுப்பாளர் ஜான்சன் தஞ்சை மாநகர மாவட்ட பொதுச்செயலாளர். இயேசு. மாநகர பொதுச் செயலாளர் கரந்தை கண்ணன். மாநகர பொதுச் செயலாளர் வடிவேல். TCTU மாநிலத் துணைத் தலைவி சாந்த ராமதாஸ். நீலகிரி ஊராட்சிமகிலா காங் கிரஸ் தலைவி மும்தாஜ் தஞ்சை மாநகர மாவட்டம் இளைஞர் காங்கிரஸ் தலைவி . வழக்கறிஞர் சௌபாக்கியா. டாக்டர். ஹர்ஷித்தா. கோட்டத் தலைவர் மகேந்திரன் எஸ்சிஎஸ்டி தலைவர் பிரிவு சுந்தர். வர்த்தக பிரிவு தலைவர் சந்திர சேகர் மற்றும் காங்கிரஸ் கட்சித் தலைவர்கள் தொண்டர்கள் திரளாக கலந்து கொண்டு மாலை அணிவித்து மலர் தூவி இனிப்புகள் வழங்கி பிறந்தநாள் விழவை சிறப் பாக கொண்டாடினர். நிகழ்ச்சியின் நிறைவாக செந்தில் சிவகுமார் நன்றி கூறினார்.



திண்டுக்கல் மாவட்டம், குஜிலியம்பாறையை சேர்ந்த பார்வையற்ற மாற்றுத்திறனாளி முனியாண்டிUPSC முதன்மை தேர்வு தேர்ச்சி பெற்று நேர்முக தேர்விற்கு செல்ல இருப்பதால் மாவட்ட ஆட்சித்தலைவர் சரவணன் அவர்களிடம் வாழ்த்து பெற்றார்.



சேலம் மாவட்டம், சீலநாயக்கன்பட்டி தேசிய நெடுஞ்சாலையில் தனியார் பேருந்து கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் காயமடைந்தவர்கள் சேலம் அரசு மோகன் குமரமங்கலம் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவதை அமைச்சர் இரா. இராஜேந்திரன் மற்றும் அமைச்சர் மா . சுப்பிரமணியன், ஆகியோர் நேரில் பார்வையிட்டு ஆறுதல் கூறி, உரிய சிகிச்சை வழங்க மருத்துவர்களுக்கு அறிவுரை வழங்கினார்கள். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி, சேலம் மாநகராட்சி மேயர் ராமச்சந்திரன். சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் டாக்டர்தேவி மீனாள் ஆகியோர் உள்ளனர்.

# ஈரோடு மாவட்டம் ஓடா நிலையில் ரூ. ஒரு கோடி மதிப்பீட்டில் தீரன் சின்னமலை திருவுருவ சிலை..

## முதல்வர் அடிக்கல் நாட்ட உள்ள நிலையில் அமைச்சர்கள் ஆய்வு..

ஈரோடு. நவ. , 20

ஈரோடு மாவட்டம் அரச்சலூர் ஓடா நிலையில் அமைக்கப்பட உள்ள சுதந்திரப் போராட்ட வீரர் தீரன் சின்னமலை அவர்களின் திருஉருவ சிலைக்கு தமிழக முதல்வர் அடிக்கல், அங்கு அமைச்சர்கள் ஆய்வு செய்தனர்.



சுதந்திரப்போராட்ட காலகட்டத்தில் ஆங்கிலேய அரசை எதிர்த்து, வீரமாக போராடி சுதந்திரப் போராட்ட மாவீரர் தீரன் சின்னமலை. அவர்கள்.

இந்த நிலையில் தமிழ்நாடு முழுவதும் குறிப்பாக ஈரோடு நாமக்கல் மாவட்டங்களில் தீரன் சின்னமலை அவர்களுக்கு பல இடங்களில் மணிமண்டபங்கள் திருஉருவ சிலைகள் அமைக்கப்பட்டுள்ளது.

ஈரோடு மாவட்டம் அரச்சலூர் பேரூராட்சி, ஓடா நிலையில் தீரன் சின்னமலைக்கு சிறப்பான முறையில் மணிமண்டபம்.

இந்த மணிமண்டபத்திற்கு தீரன் சின்னமலை அவர்கள் பிறந்த தினம் மற்றும் மறைந்த தினத்திற்கு ஈரோடு மற்றும் அதனை சுற்றியுள்ள மாவட்டங்களை சேர்ந்த பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் வந்திருந்து அவருக்கு மாலை அணிவித்து மலர் தூவி வணங்கி விட்டு செல்வது வழக்கம்.

இந்த நிலையில் அவரது மணிமண்டபம் அமைந்துள்ள ஓடாநிலை மணிமண்டப வளாகத்தில் தீரன் சின்னமலைக்கு, சென்னையில் உள்ளது போல் குதிரையில் அவர் அமர்ந்துள்ள வகையில் வடிவமைக்கப்பட்டுள்ள வெண்கல சிலை ஓடா நிலை தீரன் சின்னமலை அவர்களின் மணி மண்டப வளாகத்தில்.

இந்த மண்டபமானது ஒரு கோடி ரூபாய் மதிப்பீட்டில் அங்கு அமைய உள்ளது.

இந்த நிலையில் வருகின்ற 27ஆம் தேதி தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஈரோடு மாவட்டத்திற்கு சுற்றுப் பயணம் மேற்கொள்ள உள்ளார். இந்த சுற்றுப்பயணத்தின் போது, தீரன் சின்னமலை அவர்களின் மணிமண்டப வளாகத்தில் அமைக்கப்பட உள்ள அவரது குதிரை வீரன் போன்ற வெண்கல திருவுருவ சிலை அமைக்கும் பணியினை தொடங்கி வைக்க உள்ளார்.

அங்கு இந்த பணிகள் நடைபெற்று வரும் நிலையில் பணிகளை தமிழக வீட்டு வசதி வாரியத் துறை அமைச்சர் சு. முத்துசாமி, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி துறை அமைச்சர் மு. பெ சாமிநாதன், ஈரோடு ஆட்சியர் ச. கந்தசாமி ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

அதேபோல் சுதந்திரப் போராட்ட மாவீரர் தீரன் சின்னமலை அவர்களின் போர்ப்படை தளபதியாக விளங்கிய சுதந்திரப் போராட்ட வீரர் பொல்லான் அவர்களுக்கும் அதே மணிமண்டபம் வளாகத்தில், தமிழ்நாடு செய்தித்துறை சார்பில் ரூபாய் 4.90 மதிப்பீட்டில் மணிமண்டப அரங்கம் அமைக்கப்பட்டுள்ளது. அதனையும் அன்றைய தினம் தமிழ்நாடு முதலமைச்சர் மு க ஸ்டாலின் அவர்கள் திறந்து வைக்க உள்ளார்கள்.

இந்த நிகழ்ச்சியில் ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே இ பிரகாஷ், ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி சி சந்திரகுமார், ஆராய்ச்சலூர் பேரூராட்சி மன்ற தலைவர் விஜயகுமார், ஒன்றிய செயலாளர் மொடக்குறிச்சி குணசேகரன், கதிர்வேல் உள்ளிட்ட அரசுத்துறை அதிகாரிகள் திமுக நிர்வாகிகள் பொதுமக்கள் ஆய்வின் போது கலந்து கொண்டனர்.

# வந்தவாசி கிளை நூலகத்தில் 58 ஆவது தேசிய நூலக வார விழா...!



வந்தவாசி, நவ 20:

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி கிளை நூலகம் மற்றும் ஸ்ரீ கிருஷ்ணா கல்வி மையம் இணைந்து 58 ஆவது தேசிய நூலக வார விழாவை கிளை நூலகத்தில் நடத்தியது. இந்த நிகழ்விற்கு கிளை நூலகர் சி. சேகர் தலைமை தாங்கினார். பையூர் முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் வி.விஜயகுமார், ஓய்வுபெற்ற காவல்துறை அதிகாரி மா.கதிரொளி ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஸ்ரீ கிருஷ்ணா கல்வி மைய முதல்வர் பா. சீனிவாசன் வரவேற்றார். ஓய்வுபெற்ற தலைமை ஆசிரியர் ஆ.மயில்வாகனன் தொடக்கவுரை ஆற்றினார்.

சிறப்பு அழைப்பாளராக, தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்க வந்தவாசி கிளைத் தலைவர் பூங்குயில் சிவக்குமார் பங்கேற்று, புத்தக வாசிப்பின் முக்கியத்துவத்தை விளக்கி பேசினார். மேலும் திருவண்ணாமலை முதுகலை ஆசிரியர் உ.கிருஷ்ணமூர்த்தி எழுதிய 'பரங்கிப் பூ பூப்பதை பார்க்க நேரமில்லை' கவிதை நூலைப் பற்றிய அறிமுக உரை நிகழ்த்தினார். கலைச் சுடர்மணி பெ. பார்த்திபன் தமிழிசை பாடல்களை பாடினார். இந்த நிகழ்ச்சியில் பேச்சுப் போட்டி, ஓவியப்போட்டி, திருக்குறள் ஒப்பித்தல் போட்டிகளில் பங்கேற்ற மாணவர்களுக்கு புத்தகப் பரிசுகள் வழங்கப்பட்டது. கவிஞர் தமிழ்ராசா, வந்தவாசி வட்ட தமிழ்ச்சங்க தகவல் தொடர்பாளர் கவிஞர் மு.பிரபாகரன், சமூக ஆர்வலர் ஆ.பொன்னம்பலம், ரெட் கிராஸ் சங்க உறுப்பினர் ஜி.விநாயக மூர்த்தி மூன்றாம் நிலை நூலகர் சு.சங்கர், கலைஞர் முத்தமிழ் சங்க தலைவர் வந்தை குமரன், புலவர் ஏ.ஏழுமலை உள்ளிட்டோர் வாழ்த்துரை வழங்கினர். இந்த நிகழ்வில் வீனஸ் வித்யாலயா பள்ளி மாணவர்கள் மற்றும் ரெட் கிராஸ் அ.ஷாகுல் அமீது, சமூக ஆர்வலர்கள் முகமது ஜியா, ஓய்வுபெற்ற கல்வித்துறை அலுவலர் ஜெயக்கண்ணு, இயக்குநர் விஜய் ஆதி நாதன் உள்ளிட்டோர் பங்கேற்றனர். இந்த விழாவில் தலைமை ஆசிரியர் மயில்வாகனன், சமூக ஆர்வலர்கள் விஜயகுமார், ஜெயக்கண்ணு ஆகியோர் ரூபாய் 1000/ செலுத்தி நூலக புரவலர்களாக இணைந்தனர். இறுதியில் நூலக அலுவலர் மு. ராஜேந்திரன் நன்றி கூறினார்.

# பாரத் குழுமத்தின் 96வது பட்டை வழங்கும் விழா: பாரம்பரிய கலைகளில் ஜொலித்த மாணவச் செல்வங்கள்!

## திருப்பத்தூர் வேதா பள்ளியில் உற்சாக விழா



திருப்பத்தூர்: நவ.20–

பாரத் குரூப் ஆஃப் இன்ஸ்டிடியூஷன்ஸ் (BGI) ஏற்பாடு செய்த 96வது பட்டை வழங்கும் விழா (Belt Ceremony) கடந்த நவம்பர் 12, 2025 அன்று திருப்பத்தூர், வேதா மேட்ரிக் பள்ளியில் பிற்பகல் 2.30 மணி முதல் 4.00 மணி வரை மிகச் சிறப்பாக நடைபெற்றது. பாரம்பரிய கலைகளின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் இந்த விழாவில், நூற்றுக்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் தங்கள் அபார திறமைகளை வெளிப் படுத்தி பார்வையாளர்களை வியப்பில் ஆழ்த்தினர்.

விழாவில் BGI இன்ஸ்டிடியூஷனைச்சேர்ந்த மாணவர்கள் கராத்தே, சிலம்பம்,பாரம்பரியநடனம், மற்றும்தப்பாட்டம்போன்ற பல்வேறு கலை வடிவங்களில் தங்களது திறனை வெளிப்படுத்தினர். பாரம்பரியத்தின் பெருமையையும், நவீன காலத்தின் தேவையையும் இணைக்கும் வகையில் அமைந்த இந்தக் கலை நிகழ்ச்சிகள், ஆயிரத்துக்கும் மேற்பட்ட வேதா பள்ளி மாணவ, மாணவிகளிடையே மிகுந்த உற்சாகத்தை ஏற்படுத்தியது. குறிப்பாக, நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்கள் கராத்தே மற்றும் சிலம்பப் பயிற்சியில் தங்களின் செயல்திறன் மற்றும் துடிப்பான திறமைகளை வெளிப்படுத்தி, பாராட்டுக்களையும், உரிய பட்டயங்களையும் பரிசுகளையும் பெற்றனர்.

மேலும் திருப்பத்தூர் ரோட்டரி கிளப் தலைமை நிர்வாகிகள் Bgi மாணவர்களின் திறமைகளை வளர்க்க ஊக்கத் தொகையாக ரூபாய் 10 ஆயிரத்தை தலைமையாசன் கராத்தே கதிரவனிடம் கொடுத்து வாழ்த்தினார்,

விழாவுக்கு வேதா பள்ளியின் தாளாளர் மற்றும் ரோட்டரி கிளப் பொறுப்பாளருமான செல்வம் தலைமை தாங்கி, சாதனை புரிந்த மாணவர்களுக்குப் பரிசுகளை வழங்கினார். நிகழ்ச்சியின் சிறப்பான வடிவமைப்பு மற்றும் ஏற்பாடுகளுக்குப் பாரத் குரூப் ஆஃப் இன்ஸ்டிடியூஷனின் நிறுவனர் மற்றும் தலைமை ஆசானான கராத்தே கதிரவன் பொறுப் பேற்றிருந்தார். இவருடன் BGI அகாடமி பயிற்சி ஆசிரியர்கள் பலரும் கலந்துகொண்டு மாணவர்களை ஊக்கப்படுத்தினர்.

இந்த விழா மாணவர்களுக்குக் கலையின்பால் உற்சாகத்தையும், நமது பாரம்பரியக் கலைகளின் தொன்மை மற்றும் முக்கியத்துவத்தையும் உணரவைத்த ஓர் இனிமையான மற்றும் மறக்க முடியாத அனுபவமாக அமைந்தது.

# கோவை, மதுரைக்கு மெட்ரோ திட்டத்தை வழங்காமல் பாஜக அரசு பாகுபாடு காட்டுகிறது: தங்கம் தென்னரசு கண்டனம்

கோவை, நவ.20–

மதுரைக்கு மெட்ரோ திட்டத்தை வழங்காமல் பாஜக அரசு பாகுபாடு காட்டுகிறது என அமைச்சர் தங்கம் தென்னரசு கண்டனம் தெரிவித்துள்ளார். மெட்ரோ ரயில் திட்டத்திற்கு தகுதியான நகரங்கள் கொண்ட பட்டியலை கடந்த 2011 ஆம் ஆண்டு ஒன்றிய அரசு வெளியிட்டது. நாடு முழுவதும் உள்ள 19 இரண்டாம் நிலை நகரங்களில் மெட்ரோ ரயில் திட்டத்தை நிறைவேற்ற மத்திய நகர்ப்புற மேம்பாட்டுத்துறை அமைச்சகம் முடிவு செய்திருந்தது. புனே, கொச்சி, கோவை ஆகியவை இடம்பெற்றிருந்தன. கொச்சி மற்றும் புனேவில் மெட்ரோ ரயில் திட்டம் நிறைவேற்றப்பட்டுவிட்டது.

கோவைக்கு மட்டும் கடந்த 14 வருடங்களாக மெட்ரோ ரயில் திட்டம் கானல் நீராகவே உள்ளது. எடப்பாடி பழனிசாமி முதலமைச்சராக இருந்த கடந்த 2017 ஆம் ஆண்டு கோவையில் மெட்ரோ ரயில் திட்டம் நிறைவேற்றப்படும் என்று அறிவித்தார். 2021 தமிழ்நாடு பட்ஜெட்டில் ரூ.6,683 கோடி மதிப்பில் கோவை மெட்ரோ ரயில் திட்டம் நிறைவேற்றப்படும் என்று அறிவிக்கப்பட்டது. ஆனால், அறிவித்த நிதி ஒதுக்கப்படவில்லை.

திமுக ஆட்சிக்கு வந்த பிறகு கோவை, மதுரையில் மெட்ரோ ரயில் திட்டம் கொண்டு வரப்படும் என்று முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அறிவித்திருந்தார். இதையடுத்து விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு ஒன்றிய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டது. நீண்ட நாட்களாக ஒப்புதல் வழங்காமல் கோவை, மதுரை மெட்ரோ ரயில் திட்டங்களை ஒன்றிய அரசு நிராகரித்தது. இந்த நிலையில் ஒன்றிய அரசு மெட்ரோ திட்டப்பணிக்கு ஒப்புதல் வழங்காததை அடுத்து முதலமைச்சர் கண்டனம் தெரிவித்திருந்தார். இருந்த நிலையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் எழுப்பிய குரலுக்கு முழு ஆதரவு தெரிவிப்போம் என நிதியமைச்சர் தங்கம் தென்னரசு எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார் அதில், மதுரையும், கோவையும் தமிழ்நாட்டின் பெருமைமிகு நகரங்கள். இவை இரண்டும் இந்தியாவின் வேகமாக வளரும் ஜிவீமீக்ஷீமிமி நகரங்களில் முக்கியமானவை. இந்நகரங்களுக்கு மெட்ரோ ரயில் என்பது ஆடம்பரம் அல்ல;

அவசியமான உள்கட்டமைப்புத் தேவை. மக்கள் நெருக்கடியைக் குறைப்பது, பொருளாதாரத்தை மேம்படுத்துவது, என அனைத்துக்கும் மெட்ரோ இன்றியமையாதது. ஒன்றிய பாஜக அரசின் பாகுபாட்டை எதிர்த்து, தமிழ்நாடு மக்களின் நியாயமான உரிமைக்காகவும், எதிர்கால வளர்ச்சிக்காகவும் மதுரை மற்றும் கோவை மெட்ரோ ரயில் திட்டத்தை வழங்கக் கோரி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் எழுப்பிய குரலுக்கு முழு ஆதரவு தெரிவிப்போம்! இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

# இலங்கையில் புதிய அரசமைப்புச் சட்டம் உருவாக்கப்பட உள்ளது: விசிக தலைவர் திருமாவளவன்

சென்னை: நவ.20–


இலங்கையில் புதிய அரசமைப்புச் சட்டம் உருவாக்கப்பட உள்ளது என விசிக தலைவர் திருமாவளவன் பேட்டி அளித்துள்ளார். இலங்கை தமிழர்களுக்கு அதிகாரம் வழங்க வேண்டும் என கோரிக்கை வைத்துள்ளனர். வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணி என்பது உள்நோக்கம் கொண்ட நடவடிக்கை. எஸ்.ஐ.ஆர். பணியை கைவிட வலியுறுத்தில் சென்னையில் நவ.24ல் ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்று கூறியுள்ளார்.

# பாஜக சார்பில் சாலையோர வியாபாரிகளுக்கு கடலுதவி.



சேலம் மாநகராட்சியில் பிரதமர் நரேந்திர மோடி அவர்களின் ஸ்வநிதி திட்டத்தின் மூலம் சாலையோர வியாபாரிகளுக்கு கடந்த 4 வருடங்களாக சுமார் ரூ.10,000 மேற்பட்ட வியாபாரிகளுக்கு கடன் உதவி வழங்கப்பட்ட நிலையில் மேலும் மாநகராட்சியில் 25 ஆயிரம் சாலையோற வியாபாரிகளுக்கு முதல் தவணையாக ரூ.15,000 கடன் தொகை வழங்க மத்திய அரசு முடிவு செய்யப்பட்டுள்ளது. அஸ்தம்பட்டியில் சுமார் 5 பயனாளிகளுக்கு பதிவு செய்யும் நிகழ்ச்சி தொடங்கி வைக்கப்பட்டு மேலும் சேலம் மாநகராட்சியில் உள்ள அனைத்து வார்டுகளிலும் இந்த முகாம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது இந்த நிகழ்வில் மாநில சுற்றுச்சூழல் பிரிவு ஆர்.பி கோபிநாத்,மத்திய அரசு நலத்திட்ட பிரிவு மாநில இணை அமைப்பாளர் லோகேந்திரன், மாவட்ட அமைப்பாளர் தமிழ்செல்வன்,அழகுராஜா ஆகியோர் நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

# திருவள்ளூர் ஸ்ரீ வைத்திய வீரராகவப் பெருமாள் கோயிலில் கார்த்திகை மாத அமாவாசையை முன்னிட்டு ஆயிரக்கணக்கான பக்தர்கள் முன்னோர்களுக்கு தர்ப்பணம் கொடுத்து வழிபாடு :



திருவள்ளூர் நவ 20 :

திருவள்ளூரில் உள்ள பிரசித்தி பெற்ற 108 திவ்ய தேசங்களில் ஒன்றான ஸ்ரீ வைத்திய வீரராகவப் பெருமாள் கோயிலில் கார்த்திகை மாத அமாவாசை தினத்தன்று பக்தர்கள் கலந்து கொண்டு வழிபடுவது உண்டு. இந்த அமாவாசை நாளில் முன்னோர்களுக்கு தர்ப்பணம் செய்தால் புண்ணியம் கிடைக்கும என்பதாலும், முன்னோர்களின் ஆசிர்வாதம் கிடைக்கும் என்பதால் திருவள்ளூர் மாவட்டம் மட்டுமல்லாது சென்னை, காஞ்சிபுரம், வேலூர், திருவண்ணாமலை மற்றும் ஆந்திர மாநிலத்தில்இருந்தும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்துகொண்டு ஸ்ரீ வைத்திய வீரராகவப் பெருமாள் கோயில் அருகில் குளத்தில் முன்னோர்களுக்கு ஆயிரக்கணக்கான பக்தர்கள் தர்ப்பணம் கொடுத்து வருகின்றனர்.

நோய்கள் தீர்க்கவும், தடைபட்ட திருமணம் நடக்கவும், குழந்தை பாக்கியம் கிடைக்கவும் வீரராகவப் பெருமாளை வழிபட ஏராளமான பக்தர்கள் நீண்ட வரிசையில் காத்திருந்து ஸ்ரீ வைத்திய வீரராகவப் பெருமாளை தரிசித்து வழிபாடு செய்தனர். அதே நேரத்தில் உறவினர்கள் இறந்திருந்தால், இந்த வீரராகவர் கோயிலில் இரவு தங்கினால் புண்ணியம் கிடைக்கும் என்பதாலும் ஏராளமான பக்தர்கள் இங்கு இரவு நேரங்களில் கோயில் அருகே தங்கியும், வீரராகவரை தரிசித்துவிட்டு செல்கின்றனர்.

Published by **K.SABIULLA**,printed by **K.SABIULLA,** on behalf of **K.SABIULLA,** printed at **BEAUTIFUL** printers 6/1 devaraja Street,Triplicane chennai 600005.
puplished at 378/46.10th cross,Rajevnagar,manaparai trichy(dis) editor:**K.SABIULLA**, cell.78100-68421